**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**பவானி வட்டத்தில் மண், நீர் பரிசோதனை நிலையம்**

* 13 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை கிழக்குப் (மாவட்டம்) பகுதிக்காக பவானி வட்டத்தில் மண், நீர் பரிசோதனை நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை, ஐயா

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லை என்று சொன்னார்கள். கோவை மாவட்டம் முழுவதற்கும் ஒரே ஒரு மண், நீர் பரிசோதனை நிலையம் இருப்பதால் பல இடங்களில் இருந்து மண் பரிசோதனைக்கு அனுப்பும்போது காலதாமதம் ஏற்படுவதோடு சில சமயங்களில் தவறுதல்களும் ஏற்பட்டு விடுகின்றன. இதை உத்தேசித்தாவது எங்களுடைய கோவை கிழக்குப் பகுதிக்காக பவானி வட்டத்தில் ஒரு மண், நீர் பரிசோதனை நிலையம் ஏற்படுத்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, தனியாக அங்கு ஒரு பரிசோதனை நிலையத்தைத் துவக்க உத்தேசம் இல்லை என்றாலும் கோவையில் நடைபெற்ற மாநில மண்வள மேற்பார்வைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி அங்குள்ள பரிசோதனை நிலையத்திற்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த இலக்கைவிட, மாற்றியமைத்து அதற்குத் தனியாக இவ்வளவு இலக்குகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று அந்த இலக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சாயில் வாட்டர் டெஸ்டிங் நிலையம் வேளாண்மை முன்னேற்றத்திற்கு மிக மிக முக்கியமானது. ஆகவே, பிளாக்குக்கு ஒன்று வீதம் ஆரம்பிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை. ஆனால் அந்தப் பணியை விரைவில் முடித்துக் கொடுப்பதற்காக இப்போது வாட்டர் மானேஜ்மெண்ட் என்ற திட்டம் புதிதாக பட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இயங்கும் ஊர்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. மத்திய சர்க்காரில் இருந்து மேலும் இரண்டு ஊர்திகள் அதற்காக அனுப்பப்பட இருக்கின்றன.

1971 அக்டோபர் 21]

எந்தெந்த இடங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டுமோ அந்த இடங்களுக்கு அந்த ஊர்தியை அனுப்பி பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : இந்த மண்வளப் பரிசோதனை நிலையம் பட்டுக்கோட்டையில் அமைக்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தின் வட பகுதியில் அப்படிப்பட்ட பரிசோதனை நிலையம் இல்லாத காரணத்தால் இராணிப்பேட்டையில் உள்ள நவ்லாக்கில் பரிசோதனை நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்லாக் பண்ணையை சமீபத்தில்தான் கனம் அங்கத்தினர் அவர்களோடு நான் பார்வையிட்டேன். அங்கு இன்னும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. அவை முடிந்த உடன் இதைப்பற்றியும் கவனிக்கப் படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a great demand for good and adequate vegetables everywhere in our State and other States also. Hosur and Danganicotah taluks in Dharmapuri district have ideal conditions for growing European as well as Indian vegetables. May I know from the Hon. Minister whether he will formulate a scheme for growing of vegetables in those areas?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, காய்கறி பற்றித் தனிக் கேள்வி போடப்பட்டிருக்கிறது. அப்போது இதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மத்திய அரசு இரண்டு இயங்கும் ஊர்திகளை அனுப்பி இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே ஒன்றை கோவை மாவட்டத்திற்கு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது உறுதிமொழியை எதிர்பார்க்கிறார் என்று கருதுகிறேன். எந்தெந்த இடங்களுக்கு உடனடியாக அப்படிப்பட்ட பரிசோதனைகள் செய்யப்பட வேண்டுமோ அப்படிப்பட்ட இடங்களுக்கு அலுவலாளர்களோடு கலந்து பேசி ஆங்காங்கு ஊர்தியை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

### தஞ்சை மாவட்டத்தில் காய்கறிகள் பயிரிடுதல்

* 14. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் காய்கறிகள் பயிரிடுவதை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?